தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு	திருவள்ளுவர் யாண்டு கசஅ0 ஆனி, 1949—ஜூன்	மலர் ௩

கரந்தைப் புலவர் கல்லூரி.

மகிழ்ச்சியுரை.

இக் கல்லூரி, 1949 ஆம் ஆண்டுத் தேர்ச்சியில், இதுகாறும் வெளி வந்துள்ள முடிநிலை, முதனிலை முடிபுகள் இரண்டிலும், சிறந்த வெற்றி பெற்றுளது. புகு நிலை முடிபு வெளி வந்த பின், தெரிவிக்கப் பெறும்.

தேர்ச்சி நிலை.

முடிநிலை மாணவர் பதின்மரும் வெற்றியுற்றனர். இவர்களுள், முதல் தரத்தினர் ஒருவர், இரண்டாம் தரத்தினர் இருவர்.

முதநிலை மாணவர் பதின் மூவருள் ஒருவர் நீங்கலாக ஏனையோர் வெற்றியுற்றனர். இவருள் இரண்டாம் தரத்தினர் இருவர்.

இவ் வெற்றி நிலையினை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

இத்தகைய சிறந்த வெற்றியின் காரணமாகிய கல்லூரித் தலைவர் ஆசிரியர்களின் திறமை உழைப்புக்கள், மாணவர்களின் ஊக்கம் பயிற்சிகள், சங்கத்தார் போற்றுதல் ஆய இவைகள் பாராட்டத்தக்கன.

இக் கல்லூரி, 1—7—49 ஆம் நாள் திறக்கப் பெற்றுச் சிறப்பாக நடைபெறும். தமிழ்ப் பெருந் திருவாளர்கள், இக்கல்லூரியின் சிறப்பாக்கம் பற்றிப் பேருதவி செய்தருள்வார்களாக.

விளம்பரம்.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

மேலைச் சிவபுரி P. O.

புதுக்கோட்டை மாவட்டம்.

சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்ற இக் கல்லூரியில் வித்துவான் முதல் வகுப்பு முதல் நான்காவது வகுப்பு (Preliminary and Final) வரையும் அட்வான்ஸ் மூன்றாவது வகுப்பும், புகுமுக (எண்டரன்ஸ்) வகுப்பும் இலவசமாக நடைபெறுகின்றன.

1949 ஆம் ஆண்டுச் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளுக்குச் சென்றவர்கள் மிகச் சிறந்த முறையில் வெற்றி பெற்றுள்ளார்கள். நூற்றுக்கு எண்பத்து மூன்று வெற்றி. மிகக் கூர்ந்த அறிவும் சிறந்த அனுபவமும் உள்ள ஆசிரியர் குழாத்தினைப் பெற்றுள்ளது. இயற்கை வள நலமும், அமைதியான சூழ் நிலையும் பெற்றுள்ளது.

கோடை விடுமுறைக்குப் பிறகு 20—6—49ல் திறக்கப் பெற்றது. தகுதியுள்ள 15 மாணவர்க்குப் பொருளுதவி செய்யப்பெறும், சேர விரும்பும் மாணவர்கள் 2-7-49க்குள் விண்ணப்பத்தாள் கல்லூரி முதல்வரிடம் பெற்று அனுப்ப வேண்டும்.

ஆ. வ. இராமநாதச் செட்டியார்,
முதல்வர்.

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons..) Ph. D,

(முற்றொடர்ச்சி: துணர் உச, மலர் அ, க, பக்கம் 264.)

கள்ளாமை.

கள்ளாமையாவது பிற னொருவன் தனது உடைமை யெனக் கொண்டிருக்கும் பொருளை அவன் அறியும் வகையா யேனும் அறியாவகையாயேனும் வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை.

துறவை மேற்கொண்டு நின்று தவஞ் செய்வானுக்கு மனத்தைத் தூய்தாதல் செய்யுஞ் சாதனங்களன்றிக் குற்றத்தே பயில்விக்குங் கூடா வொழுக்க விசேடமாகிய கள்ளுதற் சிந்தையானது சாத்தியந் தலைப்படுதலைத் தடுத்து நிற்குமாகலான், அன்னான் வீடுபேறடைய விழையின், அச் சிந்தையானது ஒரு வாற்றானுந் தலையெடா வண்ணஞ் செய்தற்கு உபாயந் தருவா ராய்க், கள்ளாமை என்னுஞ் சாதனத்தைக் கூறுகின்றார். முன் தவஞ் செய்வார் யாவர் மாட்டும் பொருளின்பங்கள் பற்றிப் பொதுவகையான் நிகழற்பாலதாய கூடா வொழுக்கத்தை விலக்கினார், ஈண்டு அவர் மாட்டு அவைபற்றி ஒரோ வொருகாற் சிறப்பு வகையான் மன மொழி மெய்களுள் மன மிடமாகத் தோன்றற் பாலதாய கூடாவொழுக்க விசேடமாகிய கள்ளு தலைக் கடியு முபாயங் கூறுமுகத்தானே கள்ளாமை யென்னு மதிகாரத்தை எடுத்துக் கொண்டாராதலின் இஃது கூடா வொழுக்கத்தின் பின் வைக்கப்பட்டது.

1. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத் தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ-ள்) எள்ளாமை வேண்டுவான் என்பான்— அறி வுடையோரால் இகழப்படாப் பிறவியை விரும்புவான் இவ

னென்று சிறப்பித்துச் சொல்லப்படுவான்; எனைத்தொன்றுங் கள்ளாமை தன் நெஞ்சு காக்க—எத் தன்மைத்தாகிய ஒன்றனையும் பிறர் மாட்டு வஞ்சித்துக்கொள்ளா வகை தன் னெஞ்சினைக் காக்க, எ-று.

எள்ளாமை என்பதில் எள்ளப் படா வென்னும் பெய பெயரெச்சம் உண்ணுஞ் சோறு என்புழிப் போலப் படுவிகுதி தொக்கு எள்ளா வென நின்றது. மை என்றது பிறவியை. அஃது அப் பொருட்டாதலை 'மையறு சிறப்பிற் றெய்வம்' என்பதனானு மறிக. வேண்டுவான் வினையாலணையும் பெயர். ஈண்டு வகர விடைநிலை காலங் காட்டாது தன்மை யுணர்த்தி நின்றது. எனப்படுவான் என்பது அகரச் சாரியையுஞ் செயப்படு பொருண்மை யுணர்த்தும் படுவிகுதியுந் தொக்கு என்பானென வாகிச் சிறப்புத் தோன்ற நின்ற எழுவாய் வேற்றுமைச் சொல்லுருபாய் நின்றதும் சிறப்புடை யாண்பால் பற்றிக் கூறினு ரேனும் பெண்பாலுங் கொள்ளப்படும். உம்மை முற்றும்மை: கள்ளாமை யென்பது காரிய பொருட்டாய் நின்ற மையீற்று வினை யெச்சம். காக்க வியங்கோள் முற்று. நெஞ் சென்பதன் பின் இரண்டனுருபை விரிக்க.

மேலைக் குறளால் தவஞ் செய்வாரே அவர் செயல் தோன்றிய கூறுபாட்டானே கொடியர் செவ்வியரென்று கொள்க வென்றீர். யானொருவன் தவஞ் செய்கின்றேன். அதனைச் செய்தற்குத் துணைபுரியும் உடலுக்கு வேண்டிய உண்டி உறையுள் முதலியன பிறர் மாட்டுளவாதல் கண்டு, அப் பொருள்களைச் சுட்டி விழைவேன். விழைந்த வக்கணமே அவ்வப் பொருளுடையார் அவ்வப் பொருள்களை என் முன் வைத்துப் பணிந்து நிற்பர். யான் அவற்றைக் கொண்டு உடலைக் காத்துத் தவஞ் செய்து செவ்விய னாகி என் பிறவியைக் கடை போக்குகின்றேன். இதனால் என்னை அறிவுடையோர் எள்ளப் படாப் பிறவியை விரும்புகின்றான் இவ னென்று சிறப்பித்துச் சொல்வரன்றே' என்றாற்கு, அவ்வாறு சிறப்பித்துச் சொல்லப் படுதலை விழைபவர் சிந்தை பற்றியேனும் கள்ளுதல் செய்தலாகா தென்பார் இக் குறளைத் தந்தா ரென்க.

துறவை மேற்கொண்டு நின்று பாவனை யென்னுந் தவஞ் செய்வார்க்கு அது செய்தற்குத் துணை புரிந்து நிற்கும் உடலானது அத் தவம் முதிரும் வரை அழியாது நிற்றற் பொருட்டு உண்டியும் உறையுளு மருந்து மாகிய இவை மூன்றும் வேண்டுமன்றே, அவை வேண்டியவையாயினும் அன்னான் இடைவிடாது தவத்தினிற் றங் கருத்தைச் செலுத்தி நின்றானாயின், ஒருகாலைக் கொருகாற்பசி கடுகி உண்டியின் கண்ணும் மானம் மேற்பட்டு உறையுளின் கண்ணும் பிணி நலிந்து மருந்தின் கண்ணும் பரிசயத்தினாலேனும் விருப்பத்தினாலேனுங் கருத்து மாறிச் சகச நிட்டையைக் கீழ்ப் படுத்தும். அக் காலங்களி லெல்லாஞ் சுட்டி யொருவர் பொருளை விழையாது கள்ளாமையை மேற்கொண்டு ஒழுகினானாயின், அவனைச் சூழ்ந்திருப்பாருள் அகத் தூய்மையும் அவ்வப் பொருளுமுடையாராகியார் யாவராயினும் அவனது மனத்தி னசைவால் அறிந்தேனும் அறியாமலேனும் ஏவப்பட்டு 'இவ்வருந் தவத்தவற்கு உண்டி வேண்டுமன்றே. உறையுட் குறைபாடு உண்டன்றே, இவர் பிணி நீக்க மருந்துதவல் தகுமன்றே' என்னுஞ் சிந்தையராய் விரைந்தேகி, அவனது குறையைத் தீர்க்கு முகத்தானே அவன் செய்யுஞ் சகச நிட்டையை மேற்படுத்தி நிற்பர். நிற்க, அவன் எள்ளப்படாப் பிறவியை விழைகின்றானென்று அறிவுடையோர் அவனைப் புகழ்வா ரென்றவாறு.

இனி, உண்டியும் உறையுளு மருந்துமாகிய இவற்றைப் பிறர் தாமாய் உதவு முன்னரே பெற விரும்பி அவற்றை யுடையார் மாட்டுத் தாளிற் பெற்றேனும் இரந்து பெற்றேனும் நின்று அவற்றைக் கொண்டு உடலழியா வகை காத்துப் பற்றைத் துடைத்துத் தவத்தைச் செய்து செவ்வியனாகி நின்றானாயினும் அவன் அறிவுடையோரின் புகழுரையை ஆள்வா னென்றும், அவ்விருவகையானும் பெறாது களவுச் சிந்தையாற் பெற்று நின்றானாயின், அச் சிந்தையானது அவனது சகச நிட்டையைக் கீழ்ப்படுத்தி எல்லையற்ற பிறவிகளுக்கு வித்தாய் நிற்க, இவன் பிறவி என்னே! என்று அறிந்தோர் எள்ளி நிற்ப ரென்றுங் கூறிய வாறாயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'வீட்டினை யிகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்

படுவான், யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்கை கருதாவகை தன் னெஞ்சினைக் காக்க' என்னு முரையையும் எள்ளா தென்னு மெதிர்மறை வினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்து நின்றது.........' என்னு முரை விளக்கத்தையுந் தந்தார்.

ஒன்று திரிந்து வேறொன்றாடின தென்பது திரியாது நின்ற தெனக்கோடல் சாலாதாயினன்றே முறையாகு மென்பதனானும், எள்ளா தெனினும் ஓசையுந் தளையுஞ் சிதையாவாகலான் அப் பொருள் கருதினாராயின், ஆசிரியர் எள்ளாமை யென்றுது எள்ளா தென்றே கூறுவா ரென்பதனானும், அழகியாருரையை வல்லுரை யென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின் :- வீடு பேறுகிய பயனடைய விழையின், தவஞ் செய்வானுவான் கள்ளாமைச் சாதனந் துணைகொண்டு தவம் முதிருமாறு செய்க.

2. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்

(இ-ள்) பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்—விளையாட்டிற்காயினும் பிறனொருவனுடைய பொருளை அவனறியா வகையானே வஞ்சித்துக் கொள்வேமென்று சொல்லுதலை; உள்ளத்தால் உள்ளலும் தீதே—தவஞ் செய்வாற்கு மனத்தினுற் கருதுதலுந் தீதே, ஆகலான் அவன்றான் கள்ளாமை காக்க தன் னெஞ்சு எ-று.

உள்ளத்தால் என வேண்டாது கூறினார் அவனுள்ளம் ஏனையோருள்ளம் போலன்றித் தூய்தாந் தன்மைத் தென்று அறிவுறுத்தற்கு. உள்ளத்தால் என்புழி மூன்றனுருபு கருவிப் பொருளது. உம்மை இழிவு சிறப்புப் பொருட்டு; எதிரது போற்றிய வெச்ச வும்மையுமாம். கள்ளத்தாற் கள்வே மென்று சொல்லுதலின் இழிவைத் தனது தூய வுள்ளத்தால் உள்ளல் சிறப்பிக்கு மென்பதனுல் உம்மை இழிவு சிறப்பாத லறிக. பிறன் பொருளைக் கள்ளத்தாற் கள்வே மென்று சொல்லுதலைத் தன்னுள்ளத்தால் உள்ளலுந் தீது அவ்வுள்ளியவாறு மொழி

பற்றி வெளிப்படுத்தலுந் தீது என்று கூற உம்மை எதிரது போற்றியமை காண்க. ஏகாரம் தேற்றம். கள்ளத்தாற் கள்வே மெனல் என்றது அவனறியா வகைக்கண் நின்று கள்வே மெனல் என்னும் பொருள் படுதலின், ஈண்டு ஆலுருபு ஏழாவ தன் இடப் பொருளில் நின்றதெனக. எனல் தொழிற் பெயர்.

'யானொருவன் பிறன் பொருளை வஞ்சித்துக் கோடக் கருது கின்றேனல்லேன், மனமானது கணத்திற்குக் கணமாக ஒன்றை விட்டொன்றைப் பற்றி நிற்கு மியல்பிற்றாகலான், இடை யீடின்றித் தவத்தின்கண் நிலை நிற்கமாட்டாது. அதற்கோர் ஓய்வு கொடுத்தற்குப் பிறற் பொருளைக் கள்ளுவேனென்று விளையாட்டாகச் சொல்ல நினைக்கின்றேன். அந் நினைந்தவாறுஞ் சொல்லுகின்றேன். வீடுபேறு விழைகின்றேன் என்று பிறர் என்னைப் புகழவேண்டாம். அப்பேறு கிடைத்தற்கு இஃது தடையாகாதே', என்றாற்கு அஃது தடை யாகு மென்பார் இக் குறளைத் தந்தா ரென்க.

பிறனொருவன் தனது உடைமை யெனக் கொண்ட ஒரு பொருளை அவனறியா வகையானே வஞ்சித்துக் கொள்வே மென்று கூறுதலை விளையாட்டிற்காயினுந் தவஞ்செய்வானா வான் நினைந்தானாயினும் அந் நினைந்தவாறே மொழிபற்றி வெளிப்படுத்தினானாயினும், அவனது தூய மனத்தில் மறைந்து நின்ற பொருட்பற்று மேம்பட்டு அப்பொருளை உடையான் மாட்டு நின்றும் விலக்குதற்கண் சிந்தையை உண்டாக்கும் ஆயின், அப்பொருளை விழைந்து நிற்கும் யாவனாயினு மொருவன் அத்தவத்தவனது விலக்குதற் சிந்தையலேனும், இச் சிந்தைபற்றி வலியுற்ற சொல்லாகிய மந்திரத்தாலேனுந் தூண்டல்பெற்று அப் பொருளை அதனை யுடையா னறியா வகை களவாடி அவ னுக்குப் பொருளிழப்பையும் இவ் விழப்புப்பற்றிய மன நோவை யும் உளவாக்கி நிற்ப, இம் மன நோவானது தவஞ் செய்வான் மாட்டுத் தெறித்து மனமிரங்குதலை உண்டாக்கி நலிந்து நின்று வீடுபெறடைதற்குத் தடையாகு மாகலான் தவத்தவற்குக் கள்ளத்தாற்கள்வே மென்று சொல்லுதலை நினைத்தலும், நினைந் தவாறு மொழிபற்றிப் புலப்படுத்தலுந் தீமைபயக்குமென்று ராயிற்று.

இனித் தவஞ் செய்வானுவான் இச் சிந்தையானும், இச் சிந்தைபற்றி யெழுஞ் சொற்களாலும் பிறரைக் கள்ளுதற்கட் செலுத்திப் பொருளுடையார்க்குப் பொருட்கேடு செய்யுமுகத் தானே கள்ளுதற் கேதுவாகின்ருன் என்பதுபற்றி, அவனுக்குக் கள்ளத்தாற் கள்வேமென்று நினைத்தலுஞ் சொல்லலுங் களவின்பாற் படுமென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர் ' குற்றங்களைத் தம் நெஞ்சாற் கருதுதலுந் துறந்தார்க்குப் பாவம், ஆதலால் பிற னொருவன் பொருளை அவனறியா வகையால் வஞ்சித்துக் கொள்வேமென்று கருதற்க' என்னு முரையைத் தந்துழி 'குற்றங்களை' யென ஒரு சொல் வருவித்து நின்றது பற்றி, அவர் உரை வழீஇனு ரென்க. அஃது எவ்வா றெனின் காட்டுதும்:-அழகியார் தம் பொருளைத் துணிந்த முறை 'குற்றங்களைத் தம் நெஞ்சாற் கருதுதலுந் துறந்தார்க்குப் பாவம்; பிற னொருவன் பொருளை அவனறியா வகையால் வஞ்சித்துக் கொள்வேமென்று கருதுதல் அவர்க்குக் குற்றம். ஆகையான் பிற னொருவன் பொருளை அவனறியா வகையால் வஞ்சித்துக் கொள்வே மென்று கருதுதல் அவர்க்குப் பாவம். ஆதலால் அவர் அவ்வாறு கருதற்க' என்ப தாகும். ஈண்டு வஞ்சித்துக் கொள்வே மென்று கருதுதல் குற்ற மென்றும், அக் குற்றத்தைக் கருதுதல் பாவ மென்றுங் கிடக் கின்றமையான், இவ் வேதுக்கள் பற்றி வஞ்சித்துக் கொள்வே மென்று கருதுதலைக் கருதுதல் பாவ மென்பது துணியப்படும். பட, ஆசிரியர் வஞ்சித்துக் கொள்வே மென்று கருதுதலைக் கருதற்க என்றே கூறினாராவர். அவர் அவ்வாறு கூருமை யானும், வஞ்சித்துக் கொள்வே மென்று கருதற்க என்று பொருள் கூறிய அழகியார்க்கும் அஃது உடம்பாடன்ருகலானும், அழகியார் உரை வழீஇனு ரென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின் ;-தவஞ் செய்வா னுவான் தன் தவத்தாற் பயன் கோடல் விழையின், பிறன் பொருளை விளையாட்டிற் காயினும் அவனறியா வகை கள்வே மென்று நினைத்தலாகிய கள்ளுதலையுஞ் சொல்லலாகிய கள்ளு தலையுஞ் செய்யற்க.

எ-து.

(தொடரும்)

நன்றி அறிவிப்பு.

பேரன்புடைய பெரியீர் !

வணக்கம் பல.

அமிழ்தினு மினிய நம் தாய் மொழியாம் தமிழ் மொழியினைப் பல்லாற்ருனும் புரந்து வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நம் வட்டத் (தாலுக்கா) திற்கு 50 கல் தொலைவி லிருந்தும், இதுகாறும் இவ் வட்டத்திலிருந்து நெல் நன்கொடை பெருதிருந்தும், இவ் வாண்டு இயற்கையின் இன்னலால் இவ் வட்டத்தில் விளைவு பெரிதும் ஊறு பட்டிருந்தும், நெல் விலை மிக மிக உயர்வாக இருந்தும், யாம் புறப்பட்டது காலப் பிற்பாடாகியும்— இன்னோ ரன்ன இடர்ப்பாடுகளுக் கிடையில்—நம் கரந்தைத் தமிழ்ச் சங்க வேண்டுகோளைக் காண்பித்த வளவில், எங்கள் பால் வைத்த நம்பிக்கையாலும், தமிழ் மொழியி லுள்ள அன்பாலும், தங்கள் தங்களா லியன்ற அளவு மிக மகிழ்ச்சியோடு நெல் நன்கொடை அளித்தும், வரும் ஆண்டிற்கு மிகுதியாக அளிப்பதாக நல்லுரை யளித்தும், எங்களை நன்கு வரவேற்றுப், பல்லாற்ருனும் ஊக்குவித்த பேரன்பர் களாகிய உங்களுக்கு எங்களது உளமிகு வணக்கமும், நன்றியும் உரிய.

இப் பணியி லீடுற்ற காலை எங்களுடன் உடன் வந்தும், ஆங்காங் குள்ள நெல்லைத் திரட்டி அனுப்பி வைத்தும் உதவி புரிந்த பெரியார்களுக்கும், தோழமை கொண்ட தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், எம் பள்ளி மாணவர்களுக்கும் எங்களது நன்றி பெரிதும் உரித்து. அன்னுர்களில் சிலரது அருந் தொண்டினை யாவரும் உணர்ந்து மகிழ அன்னுர்களைக் குறிப்பிடுகின்ருேம். அத் தகைய பெரியார்கள் :—

திருவாளர் K. பொன்னுத்துரைப் பிள்ளை, எடையூர்.
,, S. அருணுசலம் பிள்ளை, குரும்பல்.
,, R. வீராச்சாமி, வேப்பஞ்சேரி.
,, சிவஞானம், சில்லாக் காங்கிரஸ் குழு அமைச்சர், கீழப்பெருமழை.

திருவாளர் அ. மு. நாராயணசாமிச் செட்டியார், குன்னலூர்.
,, K. P. முருகையாத்தேவர், கோவில் நிர்வாகி, திரு வாய்மூர்.
,, V. தருமலிங்கத் தேவர், எழிலூர்.
,, அருணாசலம் சேர்வை, கொக்காலடி.
,, நைனா மகமது, பாமணி.
,, S. வடிவேலுத் தேவர், (கி. மு.), மேல மருதூர்.
,, அழ. பால. சீனிவாச ராசா, (கி. மு.), வடசங் கேந்தி.
,, வ. இ. காளிமுத்து முதலியார், மணக்குடி.
ஆசிரியர் ,, S. சதாசிவம் பிள்ளை, எழிலூர். (மருதவனம்)
,, ,, T. S. குமரசாமிப் பிள்ளை, பாமணி.
,, ,, G. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எடையூர்.
,, ,, இராமச்சந்திர பிள்ளை, வேளூர்.
,, ,, நா. அருணாசலம் பிள்ளை, தலைக்காடு.
,, ,, வீ. சண்முகத் தேவர், தலைஞாயிறு.
,, ,, பெரியசாமி, கீழப்பெருமழை.
,, ,, சிவகுருநாதன் ,, (இவர் துடுமென இயற்கை யெய்தியமை பற்றி மிகமிக வருந்துகின்றோம்.)

இப் பெரியார்களுக்கும் இன்னும் பல அன்பர்கட்கும் எங்களது உளமிகு நன்றியும் வணக்கமும் உரிய.

இந் நெல் நன்கொடை பெற ஊர்கள் தோறும் விரைந்து செல்லக் குறைந்த கட்டணத்தில் மிதிவண்டி (சைக்கிள்) நல்கிய திருத்துறைப்பூண்டி சைக்கிள் கம்பெனி திருவாளர் சோமுப் பிள்ளை அவர்கட்கும் எங்கள் நன்றியும் வணக்கமும் பெரிதும் உரிய.

நெல் நன்கொடை அளித்த அன்பர்களின் பெயரும் அளவும் பின்னர் வெளியிடப்பெறும்.

திருத்துறைப்பூண்டி,
10—5—'49.

இங்ஙனம், அன்பர்கள்,
வித்துவான், ப. ச. நடேசன், தமிழாசிரியர்.
ப. சி. சகந்நாதன், ஆசிரியர்.

நிறமும், இராகமும்.

இசைஞர், வேலூர் திரு. கோ. மணி அழகன்.

முத்தமிழின் ஒரு கூறுகிய இசைத் தமிழில் பழங் காலத்துத் தமிழர்கள் மிக மேன்மை யடைந்துள்ளார்கள் என்பது பல நூல்களின் வாயிலாகவும் பெரும் அறிஞர் களின் ஆராய்ச்சியாலும் நன்கு புலனுகிறது.

இவ் விசைத் தமிழ் ஏழிசை யான, 'சரிகமபதநி', குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி. தாரம் என்கிற ஏழு சுரங்களும், பன்னிரண்டு நிலைகளாக மாறி, அவைகளிலிருந்து முப்பத்திரண்டு தாய்நிறங்க ளாகி, அஃதாவது, *மேளகர்த்தாக்க ளாகி, இதனுள் பல குழவிகள் பிறந்து, எண்ணிறந்த நிறங்களாக மாறி யுள்ளன. இந் நிறத்தையே தற்போழ்து 'ராகம்' என்ற வடசொல்லால் வழங்குகின்றுர்கள்.

தேவார முறையில் மேற்கண்ட நிறத்தையே பண் ணென்று வழங்குகிருர்கள். இப் பண்ணைப்பற்றிய சிந் தனையைப் பல நூல்களின்கண் செலுத்துங்காலை, பண் ணென்பது தற்போழ்து வழங்கும் தாய் நிறமாம் மேள கர்த்தாவையே குறிக்கின்றது. 'பண் ணென்பது முழு சுரங்க ளுடைய தென்றும்'. 'திறம் என்பது குறை சுரங்க ளுடைய தென்றும்', அஃதாவது, சேய் நிறமாம் சன்னிய ராக மென அந் நூல்களின்கண் காணப்படுகின்றன. மேலும், நம்தேவாரத்தில் ஒரு பாடலைக் கண்ணுறுங்காலை, அதற்குப் பண் : தக்கராகம்; மேகராகம் என்று பண்ணும் ராகமும் ஒன்ருய் உறவாடுகின்றன. நிற்க, ஓ ரிசைப்

---

*தற்போழ்து புனைசுரங்களுடன் கூடி எழுபத்திரண்டு தாய் நிறங் களாக மாறியுள்ளன. இஃது இடைக்கால வழக்கில் புகுந்தும் செய்கைக்கு ஒத்துவாராதது.

புலவனை நோக்கி, 'பண் பாடுபவர் வருகிறார்' என்று கூறி னால், இசை பாடுபவர் வருகிறார் என்ற பொருள்தான் படுமே யொழிய, இராகம் பாடுபவர் வருகிறார் என்ற பொருள் கொண்டால், அப் புலவருக்கு இராகம்தான் பாடத் தெரியுமே யன்றிப், பாடலை அழகுபடுத்திப் பல 'சங்கிலி'கள் கோத்து, இடக்காக 'நிரவல்' செய்து, அடுக் காகச் சுரம் பாடி, மிடுக்காக முடிக்கத் தெரியா தென்று தான் நினைக்க நேரும். ஆகலான், பண் ணென்பதன் பொருள் இசை யென்றே படுகின்றது. இங்ஙன முண் டாகும் முரண்பாடுகளுக்கு நா மிணங்குவோமானால், இசைத் தமிழை வளர்ச்சி செய்வ தியலா தென்ப தொரு தலை. ஆகலான், பழையன ஒழிதலும் புதியன புகுதலும் நல மாகலான், இசையின் புத்துயிர்க் கேற்ற புதியவை களை அறிவுக் கடலில் அலசி அழகுட னிணைப்பதே அறி வுடையோர்க் கழகாம்.

அது செல்ல, 'நிறம்' என்பதைப்பற்றிச் சற்று ஆராய் வாம். வடமொழியில் கூறும் 'ராகமும்' அருந்தமிழில் கூறும் 'நிறமும்' மொழியினால் வேற்றுமை யடைகின்றவே யொழிய, ஏனையவைகளில் ஒற்றுமையாகவே காணப்படு கின்றன. எவ்வாறெனில், 'வண்ணம்' என்பது ஒரு பொதுப் பெயரே. அதில் பிரிவதே பல நிறங்கள் (ரகங்கள்). எடுத்துக்காட்டாக, சிவப்பு, மஞ்சள், நீலம், வெண்மை, கருமை இவைகள் போன்றது. பொதுவாகவே மக்களுள் ளும், பிறவற்றிலும் பல விதமாகக் காணப்படுதலால், அவன் ஒரு தனி 'ரகம்', அது ஒரு தனி 'ரகம்' என்று வழங்கப்படுவது கண்கூடு. அதுபோன்று தாய் நிறமாம் மேளகர்த்தாவில் பிறந்த பல குழவிகளை வட நூலார் ரகங்களாகப் பிரித்தனர். இசை முறையில் தாய் நிறமும் முப்பத்திரண்டு பிரிவுகளாக்கப்பட்டதினால், பொதுவாக அவைகளையும் முப்பத்திரண்டு ரகங்கள் என வழங்கினர் போலும்!

பொருந்துமா? (ரு)

வித்துவான், M. குஞ்சிதபாத தேசிகர்,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

உருவம், நிறம் முதலியன ஊடுருவக் கூடிய ஒரு வகை ஒளிக் கல்லிற்குப் பளிங்கு என்று தமிழ் மொழியில் வழங்கி வந்தனர் என்று தெரிகிறது. வள்ளுவர் காலத்திலேயே தமிழ் நாட்டில் அதன் தன்மையை அறிந்து பயன் படுத்தி வந்தனர்.

இந்த ரகமே ராகமாக மாறி இருத்தல் கூடும். காரணம், இசை இன்னொலியுடன் கூடிய, நீண்ட ஓசை யாகலான், ரக மென்பது திரிந்து ராக மாயிற்று போலும்! இவ் விராகத்திற்கு நேரான தனித் தமிழ்ச் சொல் 'நிறம்' என்பதாம். எடுத்துக்காட்டாக, அள்ளும் சிலப்பதிகாரத்தில் அழகுட னுரை தீட்டிய அடியார்க்கு நல்லார், 'பல இயற் பாட்டுக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையெனப் பட்டது' என்று கூறியுள்ளதை நோக்குங்கால், இசை யமைப்புப் பெரு பல இயற்பாட்டுக்களுடனே நிறத்தை (இராகத்தை) இசைத்தலால் இசை யெனப்பட்ட தென்ப ததன் பொருள். ஆகவே, ராகம் என்கிற வடசொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் 'நிற' மென்பது தெள்ளிதிற் புலனும். ஆனல், 'நிறம்' என்பது நீறம் என்று ஏன் மாறவில்லை என்று கேட்கலாம். அதுதான் இயற்கையில் தோன்றி இறவாத் தன்மை யெய்திய இறை மொழியாம் நம் தமிழ் மொழி பொரு ளற்ற தல்ல வென்று புலனுக்குகின்றது.

ஆகலான், காலத்திற்கு முற்பட்ட 'நிறம்' என்ற சொல் லுக்குப் பிற்பட்டனவே ஏனைய வடமொழி இசை நூல் களும் அதில் பொதிந்த 'ராகம்' என்ற சொல்லும். ஆகவே, தற்கால இசைத் தமிழ்வாணர்கள் ஏட்டிலும் வழக்கிலும் 'நிறம்' என்ற தனித்தமிழ்ச் சொல்லைப் போன்ற ஏனைய சொற்களையும் வழங்குவாராயின், துய ராழியில் மூழ்கிய நம் இசைத்தமி ழன்னையைக் கரையேற்றியவ ராவார்கள்.

இப் பளிங்குக் கல்லே ஆங்கிலத்தில் (Crystal) என்றும், வட மொழியில் (ஸ்படிகம்) என்றும் சொல்வர். இக் கல் வல்லம், நருமதை யாற்றங் கரை முதலிய இடங்களில் கிடைக்கின்ற வகையைச் சேர்ந்தது. இந்த இயற்கையான ஒளி ஊடுருவும் கற்களே வேண்டியவாறு பல வகையில் உபயோகித்தனர் என்று பின் வரும் எடுத்துக்காட்டுகளால் அறியக்கிடக்கின்றன.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' என்று திருவள்ளுவர் உவமை கொடுத்துள்ள காரணத்தினல், திருவள்ளுவர் கால மாகிய இற்றைக்கு ஏறத்தாழ 1979 ஆண்டுகளுக்கு முன், நம் நாட்டில் வழங்கி வந்தனர் என்பதை உறுதியாகக் கூறலாம்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், 'இருதிணை' என்ற சூத்திர உரையில் இளம்பூரணர், 'பளிங்கு செம்பஞ்சி யடுத்தாற் செம்பளிங்கு எனப்படும்; கரும்பஞ்சி யடுத்தாற் கரும் பளிங்கு எனப்படும். அதுபோலச் சார்ந்து வந்தவற்றது வேற்றுமை பற்றி வேறு பெயர் கொள்ளப்பட்டது.' என்றும்,

ஐம் பெருங் காவியங்களுள் ஒன்ருகிய சீவக சிந்தாமணியில்,

'பாவனையுள் இருக்கும் இடம் பளிங்குச் சுவர் இயற்றி'
(594)

'மாக் கடல்.............
வான, நீர் திரள் பளிங்குத் தூணி சுரந்திட' (3071)

'பளிக்கறை பவளப் பாவை

'கூட்டரக் கெறிந்த பஞ்சிற் கூடிய பளிங்கில்
தோன்றும்' (1166)
எனறும்,

'மணிமேகலையில்'

'பளிங்கு செய் மண்டபம்'
'பளிக்கறை புக்க காதை' என்றும்,

புறநானூற்றில்,

'பளிங்கு வகுத்தென்ன நீர்.' (150)

என்றும்,

பத்துப் பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டில், 'பளிங்கு சொரிந்தன்ன பாய் சுனை' என்றும் வந்துள்ளன. இன்னும் சில மேற்கோள்களும் உண்டு. ஆகவே, சங்க இலக்கிய காலத்திலேயே பளிங்கு தன்னை யடுத்துள்ள உருவம் அல்லது நிறத்தை ஊடுருவிக் காட்டும் தன்மை வாய்ந்தது. அதனை மழை நீர் முதலியவற்றிற்கு உவமையாயும் கூறுவர். மேலும், பளிங்குச் சுவரின்கண், பாவை, யானை, கலைமான் தாமரை மலர்ந்த தடாகம் முதலியவற்றை வரைந்துள்ளனர். வந்து காண்போருக்கு இது புறப் பக்கமா, உட் பக்கமா என்னும் ஐயப்பாட்டினை உண்டாக்குகிறது என்னும் பொருள் பட,

காமர்களிறும் பிடியுங் கன்றும் கலைமானும்
தாமரை வாவிகளும் புள்ளும் தகைநலத்தின்
ஏமுறுவ பாவையினோ டியக்கி நிலையெழுதி
யாமொரையங் காண்பவர்க் கிதகம்புற மிதெனவே (சீவக. 596)

என்பதால் பளிங்குக் கற்களால் இயற்றிய சுவரின்கண் சித்திரம் அழகாக வரைந்திருந்தனர் என்பது போதருகின்றது.

இஃதன்றிப், பளிங்கினால் பொருமுக எழினி

அஃதாவது, இரண்டு பக்கம் பொருத்தும்படியான திரைச் சீலை செய்து இருந்தனர் என்பது, 'பொருமுகப் பளிங்கின் எழினி வீழ்த்து' (மணிமேகலை, காதை 5, வரி 3) என்ற அடியால் தெரிகிறது.

இன்னும், பளிங்கினால் உயர்ந்த மாடங்களில் தரையை அழகுபெற வைத்திருந்தனர். பளிங்குக் கற்களினால் இயற்றிய நிலத்திற்கும் பக்கத்தி லுள்ள நீர் நிலைக்கும் வேற்றுமை தெரியாமல் தளவரிசை செய்யப்பட்டு இருக்கிறது. பளிங்குக்

(எழினி—திரைச்சீலை)

கல்லினால் இயற்றிய இடத்தை நீர் நிரம்பின் இடம் என்று நினைத்து, உடை நனைந்து விடுமே என்று கருதி, உடையைச் சுருக்கிக்கொண்டு சென்றான். நீர் இல்லாமல் இருப்பதையும், பளிங்கினால் இயற்றப்பட்டதையும் கடந்து சென்றபின் தெரிந்து கொண்டான். பின்னால் தன் உடையைச் சுருக்கிக் கொண்டது தன் அறியாமை என்று உணர்ந்து கொண்டவனாய்ச் செல்லும்போதே உண்மையான சிறிய நீர் நிலையைப் பளிங்கினால் இயற்றிய இடம் என நினைத்து உடையைச் சுருக்காமல் வேகமாய் நடக்க, நீர் நிலையில் திடுமென அரசவையாருக்கு நகை விளைப்ப வீழ்ந்தான் என்னும் பொருள்பட,

சூழ்ந்த பேரொளி துளும்பிய நிலநீர்எனத்
தாழ்ந்தவர் துகிலிடை வயிற் றழீஇயினன் பளிங்கு
போழ்ந்துஇயற்றிய நிலமென பூம்புன லிடைபோய்
வீழ்ந்தனன்பெரு வேத்தவை முகிழ்நகை விளைப்ப'

என வரும் பாகவதச் செய்யுளால் உணர்க. இனிப் பளிங்கினால் இயற்றியுள்ள அறை ஒளி உருவம் ஊடுருவித் தெரியுமேயன்றி, ஒலி (Sound) ஊடுருவி வெளியில் கேட்காது என்னும் உயரிய விஞ்ஞானக் கருத்தை அக் காலத்தில் அறிந்திருந்தனர் என்பது, கீழ் வரும்

'விளிப்புஅறை போகாது மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டு' (மணிமேகலை, 3, 63—4)

தன்னுட் புகுந்தவர்களுடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்கள் உருவத்தைமட்டும் வெளிப்படுத்துவது என்று அப் பளிங்கு மண்டபத்தின் தன்மை கூறியவாறு. (அறை—ஓசை) என்ற குறிப்புரையும் மேற் கூறியதை வலியுறுத்தும்.

இப் பளிங்குக் கல் எரிமலையின் வீழ்ந்த மணலின் செயலால் உண்டானது என்று சிலர் கருதுகின்றனர்.

இதுகாறுங் கூறியவற்றால், பளிங்கு பூமியில் அகப்படும் ஒரு வகை இயற்கை ஒளிக் கல் என்பதும், இதனை வள்ளுவர் காலத்திலேயே தன்னை அடுத் துள்ள உருவத்தையும்

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

மனக்கவலை நீக்கும் வழி.

படிக்கும் நிலை மாறி அல்லது தன் பொறுப்பு ஏற்றதி லிருந்து உலகி லுள்ள மாந்தர் ஒவ்வொருவருக்கும் நாளடைவில் தோன்றும் எண்ணங்களும், அவ் வெண்ணம் முற்றுப் பெற வேண்டுமே என்ற கவலைகளும் பல வாம். அவற்றை இவ்வளவுதான் என்று எண்ணி, இலக்கமிட்டு, ஏட்டில் எழுத இயலாது. மனிதன் எப்பொழுதும் இன்பத்தையே விரும்புபவனாக இருக்கின்றான். இதற்கு மாறாக வுள்ள துன்பத்தை யாரும் விரும்ப மாட்டார்க ளென்பது யாவரு மறிந்த வெளிப்படையான தொன்றே யாம்.

மன விருப்பம் மேற்கண்டவாறு இருப்பினும், படிப்புக் காக, நல் உடைக்காக, தொழிலுக்காக, ஊதிய உயர்வுக்

நிறத்தையும் ஊடுருவிக் காட்டக் கூடியது என்பதும், பளிங்குக் கற்களால் சுவர், மண்டபம், திரை, தரை முதலியன இயற்றத் தெரிந்திருந்தனர் என்பதும், ஒளியே யன்றி ஒலி (Sound) ஊடுருவிச்செல்லாது என்ற உயரிய விஞ்ஞானத்தை மணிமேகலை ஆசிரியர் காலத்திலேயே தமிழ் நாட்டில் அறிந்திருந்தனர் என்பதும், கூறிய பொருள்களாகக் கொள்க, பொருந்துமா? கருதுக.

காக, மணஞ் செய்து கொள்வதற்காக, தம் குழந்தைகளுக்காக, தங்கள் தங்கள் உடல்நிலை சரிவர இருத்தற்காக, என்ற இன்னோரன்ன ஏதாவதொரு கவலையால் மக்கள் வாட்ட முறுவது திண்ணம். கவலையில்லா மனிதன் உலகில் இல்லை என்றே சொல்லலாம்,

பெருஞ் செல்வம் படைத்தாற் கவலையில்லை என்று நினைப்பர் சிலர். செல்வ முடையவ ராயினும், செல்வாக்குடையவ ராயினும், செல்வத்திற்கும், செல்வாக்கிற்கும் தக்க பல கவலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து தூக்கத்தைக் கூட வராமல் தடுக்கும் தன்மையைக் காட்சி யளவில் கண்டு தெளியலாம்.

கவலை யின்றி வாழ்ந்துவரும் முறையை நம் முன்னோர் தெரிந்திருந்த காரணத்தால் தான், நீடித்த நாள் நோயின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார் என்பது மிகை யாகாது. கல்வியின் மேன்மையாலும், உயர் நோக்காலும் ஒரோவழி கவலை நீங்கி யிருப்பதுடன், கடவுள் வழிபாடு என்ற நிலையிலே, ஏழை, பணக்காரர், அறிவுடையார், அறிவிலி என்ற பாகுபாடு இன்றி, இறைவன் முன் யாவரும் சரி என்ற அமைதியுடன் மனம் ஒன்றி வழிபாடு இயற்றலே கவலை நீக்கும் என்ற நம்பிக்கையுடன், மகிழ்ச்சியும் சேர்ந்து சில நாழிகை அமைதியுடன் கடவுள் வழிபாட்டின் மூலம் உடல் நலமும் உள நலமும் பெற்று, இன்பமாய் இருந்தனர் என்று கொள்ளுதல் நலம் பல பயக்கும். தற்கால நாகரிக வாழ்க்கையி லீடுபட்டாராய், அன்பின்மை, ஒற்றுமை யின்மை, கவலை முதலிய தொத்து நோய்களுக்கு இடங் கொடுத்து நாளும் அல்ல லுறுவதையே அமைதியின் ஆற்ற லுள்ளார் சிலர் காணு திரார்.

இயற்கைப் பொருளோடு இயைந்து, வஞ்சனை யின்றி, உண்மை, அன்பு, முதலிய நற் குண முடையாராய், உடல் நலமும் பெற்று வாழ்ந்து வந்தார் பலர், தமக்கும் பிறர்க்கும் உதவும் ஆற்றல் பெற்றிருந்தா ராவர், மனக் கவலைக்குப் பெரும்பாலும் இடந் தருவ தில்லை. ஓய்வு நேரங்களையும் வீணுக்காது மறுமைப் பயனேடு இம்மைப் பய னளிக்கும் கவலை நீங்கு வழியாகிய கடவுள் வழி பாட்டிலே கருத்தைச் செலுத்தி வந்தனர். இதனுல் இக் காலம் போலப், பிறர் வாழ்க்கையிற் றங்கள் கருத்தைச் செலுத்தி, வீண் வம்பை விலைக்கு வாங்கி, நீதி மன்றத்தில் வெற்றி பெற வேண்டுமே என்று அல்லும் பகலும் கவலை யுடையாராய் அலைந்து திரியும் சிலரைக் காட்சி யளவிலே காணவும் கூடும். மெய்யுணர்ந்தார் ஓய்வுடன் உறுதி பயக்கும் இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திகழ்ந்தார் என்பது கடவு ளீடு பாட்டில் தம் மனத்தைச் செலுத்திய பெரியோர் உண்மை நோக்கால் கண்ட தொன்றே யாம். இவ் வுண்மையைப் பொய்யா மொழியார்,

> 'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது.'

என்று கடவுள் வாழ்த்திலே கண்டு தெளிய வைத்தார். அரசர் முதலியோர் கவலை நீங்க இடைஇடையே வேடிக்கைகள் நிகழ்த்திக் கவலைகளைப் போக்கினர். ஆனுலும், உண்மையான வழியும் உறுதியும் பயக்கக் கூடிய வழி கடவுள் வழிபாடே யாம் எனத் தெளிக. நோயாளரும் கவலைகளாற் றுன்புற்ருேரும், 'தல யாத்திரை', 'தீர்த்த யாத்திரை' என்ற நம்பிக்கையின் மூலமாகப் பல இயற்கை வளம், பல பெரியோரைக் காணல், பல வகையில் நல்ல காற்று, நல்ல நீர் முதலியன பட்டுக் கவலை நீங்கி உள

நீத்தார் பெரியர்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

எவ் வகைப் பிறவியிலும் செவ்விதாய்ச் செய்வன இன்ன, தவிர்வன இன்ன, இன்ன செய்யின் இது விளையும், இது எய்தாதென் றெருக்க வுன்னும் மயர் வறு முயர் வுறு மக்கட் பிறவி யெய்தினர், நலன் விளங்குதற் கேதுவாகிய அறிவுடையா ராதலின், அன்னார் பரந்த பல்லுயிரின் தலைவ ரென நிற்கும் தகுதி வாய்ந்துள்ளார். இவ்வாறு பகுத்துணரும் சிறப்பறிவுடைய மக்கட்குழூஉக்களில் சிலர் ஐம்பொறியும், ஐம்புலனும், ஐம்புலன்களிற் செல்லும் அவா வைந்தும், ஆகியவற்றின் இயற்கையினை யுணர்ந்து பின் இவ்வுலக வாழ்வு எவ்வாற்றானும் துன்பந் தருவதெனத் தேர்ந்து இதனின்றும் இன்ப முறும் வழியினை நாடி தவத்துறை நின்று இவ்வையகத்திலுறைபவராவர். இத்தகைய அறவடிவுடைய அறிவரது சிந்தையும் செயலும், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்

நலத்தோடு உடல் நலமும் பெற, நல் வழியைக் காட்டியுள்ளார்கள். இதனால் பல நோய்கள் நீங்குவதும் இயல்பே. இவ் யாத்திரையும் பல நாட்டுவளங் காணாது, புகைவண்டியிற் புழுங்கிச் சென்று மூர்த்தி தலங்களை வழிபடச் செல்லவில்லை. நாட்டு வளங்களுடன், நற் காற்றும், காட்சியின்பமும், மலை வளம், நீர் வளம் பல கண்டு பண்பாடறிந்த பெரியார் பலருடன் பாடறிந் தொழுகிப் பல்லூர்களையும் பார்த்த காரணத்தால் மனச் சாந்தம் எய்தி, உடல் நோய் போக்கி, உண்மை இன்பம் திளைத்தனர் எனக் கொள்க.

பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நின்றிலகும் ஒன்றின் மேற் செல்லுமாதலின், இன்னார் உளங்கனிந்து கூறியன வெல்லாம் மறை மொழிகளெனவும் சொல்லப்படும். இம் மறை மொழிகளே நிறைமொழியாக நிலவுலகில் நிலவி, பெரியார் பெருமையினை உலகறியத் தப்பாமல் உணர்த்தும். இத்தகைய நீர்மையாரது எண்ணத்தானும் நோக்கானும் மொழியானும் அழிவும் ஆக்கமும் உளவாம். இச் சிறப்பியல்புடையவர்கள் தாம் எல்லா வுயிரிடத்தும் செந்தண்மை பூண்டு பேரறிஞராய் நிலவும் நிறைமொழி மாந்தர். இவர்கள் ஒருவரை அருளவும் வெகுளவும் வல்லராய்த் தருக்கு நீங்கி தமதாற்றலைத் தமக்கு இடுக்கண் நேரினும் வெளிப்படுத்தாதும், பிறர்கேடு சூழலு மில்லாதும் அடங்கி யிருக்கும் மாட்சிமை யுடையவர். மற்றும்,

> ‘வையமுந் தவமுந் தூக்கின் தவத்துக்கு
> ஐயவியனைத் தும் ஆற்றாது’

என, தவப்பேற்றின் ஆற்றலையும் அருணிலையினையும் நன்கு துணிந்தவர். இன்னாரது இயல் பறிந்து அருள்வழி நிற்போர் எழிலும் ஏற்றமும் இன்பமு மடைவரென்பது திண்ணமாதலான், இப் பெற்றித்தாய நீத்தாரைப் பேணித்தமராகக் கொளல் அரியவற்று ளெல்லாம் அரியதென்க.

இத் தகைய தவ இயல்பு பெற்றார் தம் ஆணைவழி நடைபெறாதது உலகில் எதுவுமில். விலங்குகளும் சிற்றுயிர்களும் தம் இயல்பு திரிந்து நீத்தாரது தவ மிகுதியான் ஏவல் செய்தொழுகி அன்னார் வயமாய்த் திகழ்வது,

> ‘மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
> செந் தீப் பேணிய முனிவர் வெண் கோட்டுக்
> களிறு தரு விறகின் வேட்கும்
> ஒளிறிலங் கருவிய மலை’

என வரூஉம் பெரும் பாணாற்றுப்படை வரிகளானும்,

> ‘கான யானை தந்த விறகிற்
> கடுந் தெறற் செந்தீ வேட்டுப்
> புறந்தாழ் புரி சடை புலர்த்து வோனே’

என்ற புற நானூற்றடிகளானும் நுனித் துணரப்படும்,

சுவை யொளியூ றோசை நாற்றமென் றைந்தின் வகை தெரிந்து அவற்றின் தோற்றுவாயை அறியவல்ல நீத்தாரது அறிவின்கண் உலகத்தினியல்பு அமைதல் இயற்கையாதலின் எண்ணில் வளம்பெறு விசும்பு, மண், புனல், தீ, கால் முதலாய ஐம்பெரும் பொருள்களும், நீத்தார் பால் தம்மியல்பும் மாறியமைந்து இயங்காநிற்குமென்ற உண்மைக்கு உறுபெருஞ் சான்று, கற்புக்கடம் பூண்ட ஆதிரை நல்லாளின் வரலாற்றின் நறு நிகழ்ச்சியால் துணியப்படும். இது,

‘ முடலை விளக்கின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்
படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்ளெரி யுறாஅது
ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாஅது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்ப ’

என மணிமேகலையில் நுவலப்பட்டிருப்பதினுன், நீத்தார் தம் தவத்திருவும் பிறவும் நினைதொறும் பெரு வியப்பும் விம்மிதமும் தரும் அருமைப் பாடுடைய தென்பது கருத்திற் பதிக்கற்பாற்று.

புலனுகர்ச்சி வழி மனதினை புக்குழல விடாது அறிவினால் அடக்கி ஆளும் வன்மையுடைய நீத்தாரால் வெகுளப் பட்டார், வெகுளியின் பயன் தம்பால் எய்தாமல் தம்மைக் காத்துக் கொள்ளலியலாது. நீத்தார் வருந்துமாறு பிழை செய்தார், அந் நீத்தாரால் வசை கூறப்பட்டு நீங்கா நிரயத் துன்பத்திலுழலுவர் என்பதற்குச் செந்தமிழை யிகழ்ந்து நக்கீரரால் வசைபாடப்பட்ட குயக்கொண்டானென்னுங் கயவன் வரலாறே நேரிய சான்றாகும். நீத்தாரது அருமையும் பெருமையும், ஆற்றலும் உணர்ந்தன்றோ, மாவளவன் எனும். சோழ மன்னன், தாமப்பல் கண்ணனர் வெகுண்ட ஞான்று தாமும் வெகுளாது பொறுத்துப் பணிந்து, பின்னர் அவரால்

புகழப்பட்ட உண்மை வரலாறு புறநானூற்றுக் குறிப்புகளாற் றெளிவாகும். ஆக்கவும், அழிக்கவும் வல்ல கழாத்தலையாரால் இகழ்ந் துரைக்கப்பட்ட இருங்கோவேளின், வளஞ் சான்ற அரையம், அத்தவ வாழ்வினர் தம் சொல் லம்பால் அழிந்து பாழ் பட்டது.

'இருபாற் பெயரிய உருகெழு மூதூர்க்
கோடிபல அடுக்கிய பொருள் நுமக் குதவிய
நீடுநிலை அரையத்துக் கேடுங் கேளினி.........
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்த தன் பயனே'

என்ற புறநானூற்றுப் பாவால் தெளிய அறியப்பட்ட மெய்ம்மையாகலின், நீத்தார், தம் தவத்திருவுடைமையால், கூற்றங் குதித்தலுங் கைகூடி, ஒன்னார்த் தெறும் ஆற்றலும், உவந்தாரையாக்கலும், அரிய செயல் மூலம் வேண்டிய வேண்டியாங் கெய்தலும் வாய்ந்தாராய் விளங்குவது வலியுறுத்தப்பட்டது காண்க. பிறராற்செயற் கருஞ் செய்கையுடைய நீத்தார், அறிவாற்றலாலும் மெய் யுணவார்ற்றலாலும் விழுப்பம் மேவி விளங்கினமையினை விரிப்பிற் பல்கும். இதனானன்றே, ஐம் புலன்களால் அழியும் மயக்கினை நீக்கித் தவ வொழுக்கந் தலை நின்று, உண்மை அறிவின்பங்களையே உருவாக் கொண்ட இறைவன் அருள்வழி இடையறு தொழுகி யாவருக்கும் இனிய நீரராய் வயங்கும் உள்ளத்தாரை, தமிழ் மறை தந்த தண்ணளியாளர், நீத்தா ரெனவும், அவர் தம் பெருமை உல கொப்பியது எனக்கொண்டு, நீத்தார்க் குண்டாகும் இன்பத்தினும் மிகச் சிறந்ததொரு இன்ப மில்லை யென்று தம் முப்பானூலில் உணர்த்தியுள்ளார்.

பருப் பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிது விளங்குமாதலான், பாயிரம் உரைத்து, நூலு ரைப்பது தமிழ் மரபு எனவே, திருவள்ளுவர், 'ஆயிர முகத்தானமைந்ததாயினும், பாயிரமல்லது பனுவலன்றே' என்ற சான்றோரது வழக்குப்படி கடவுள் வாழ்த்தென்னும்

முதலதிகாரத்தில் முதற்பட்டால் கடவுளிருப்பையும் ஏனை ஒன்பது பாட்டால் பயனும், இரண்டாவது வான் சிறப்பு எனும் அதிகாரத்தால் நூலுட் கூறப்படும் இல்லறம் துறவறம் ஆகியவற்றிற்குரிய கொடையும், அரிதாகிய தவமும், மழையின்றி நடவாமையின், அவற்றிற்கு மழை இன்றியமையாது வேண்டப்படுதலால், அதன் தொடர்பும், மூன்றாவது நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தால் நூலிற்குரியாரும், நான்காவது அறன் வலியுறுத்தலென்னு மதிகாரத்தால் நுதலிய பொருளும் குறணூலுக்குப் பாயிரமாகக் கூறியருளினர். மற்றும் நூனுதல் பொருளைத் தன்னகத்தே யடக்கி எனும் விதிப்படி அறமனைத்தும் கடவுள் வாழ்த்திலும், பொருளனைத்தும் மழையிலும், இன்ப மனைத்தும் நீத்தார்க்கு உண்டாகும் இன்பத்திலும் அடங்கி இம் முப்பானால் மிளிர்கின்றது. பொதுவகையான் சிறுற்று விளங்கி அடங்கும் அறத்தின் ஆற்றலை சிறப்புவகையான் இன்றியமையாது மேற்கொண்டொழுகும் அறத்தின் காவலர் இம்மைப்பயனேயன்றி அம்மைப்பயனும் வீடுபேறு மடைவரென்பதை யுணர்த்தவே, வள்ளுவப் பெருந்தகையார் அறன் வலியுறுத்த லென்னும் அறத்தின் பெருமையினை நீத்தார் பெருமைக்குப் பிற்கூறிப் பாயிரத்தி னிறுதியில் அமைத்தனர். மற்றும் அறவொழுக்கத்தைப்பற்றிப் பிறவொழுக்கத்தை நீத்தார் அறவோ ராதலின், அறன்வலியுறுத்தலென்னும் அதிகாரத்தோடு நீத்தார் பெருமையினை இயைபு படுத்தவேண்டி, நீத்தாரை செந்தண்மை பூண்ட அந்தண அறவோ ரென்று,

‘அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ் வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண் டொழுக லான்’

என்ற குறளில் சுட்டிக் குறித்திருப்பது உளங்கொளற் பாற்று.

பாயிரத்தின்கண் எடுத்தாளப்படும் நீத்தாரையே, நூலுட் குறள்களிலும், துறவோர், பெரியர், அந்தணர், அறவோர், தக்கார், என உணர்த்தப்படுதலும், துறந்தோர் பெருமை துணைக்கூறின், துறந்தார்க்குத் துவ்வாதவர்க்கு,

துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி, துறந்தார் படிவத்தராகி துறந்தாரிற் றூய்மை யுடையார், துறப்பர் மற்று துப்புரவில்லார், துப்புர வில்லார் துவரத் துறவாமை, சினத்தைத் துறந்தார், துறந்தார் துணை தலைப்பட்டார் தீரத் துறந்தார் முதலாய பிற விடத் தெல்லாம் எதிர்மறையானும் உடன் பாட்டானும் துறத்தலை நீத்தற் பொருள்படவே ஆசிரியர் கூறியிருப்பது அறியற்பாலது. துறந்த பெரியாரது பெருமையினை நூல்களின் துணிவு, விழுமியதாக விரும்புவதில் வியப்பின்றே. நூலுள் துறவைத் தனி யதிகாரமாக்கி விளக்கிய தேவர் பாயிரத்துள் நீத்தார் பெருமையை அமைத்துக் குறிப்பதன் நோக்கம் யாதெனின், அஃது பொறி வாயி லைந்தவிக்கும் பேராற்றலும் பேரறிவு முடைய தக்காரின் உயர்வினையே, மனமொருவழி செயலொரு வழியாக நின்று தம்மையு மிழித்துத் தாம் இந்திரிய வய மயங்கி இறப்பதற்குக் காரணமாய் நிற்கும் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய மாந்தர்க்கு வற்புறுத்தற் பொருட்டே யாமென்க.

ஒழுக்கத்தின் பொருட்டு எல்லாப்பொருளையும் துறந்தாரது பெருமையே இவ் வுலகம் போற்றுதலான் அதனைச் சிறப்பித்துக் கூறுதல் வையத்தே வழங்குகின்ற எவ்வகைப் பட்ட நூலோர்க்குந் துணிவு. நீத்தார் பெருமை தொல் புவனப் பெருமை யாகும். காரியமான உலகம் அறிவான் கண்ணதாதல்பற்றி, அறிவாகிய தோட்டியானேரைந்துங் காப்பான், இவ்வுலகில் திரிபுணர்ச்சியும் மயக்க வுணர்ச்சியும் ஐய வுணர்ச்சியும் முறையாக நீங்கப் பெற்றுயர்ந்து இருமை வகை தெரிந்து துறவறம் மேற்கொள்வார். ஐம்பொறிகளையும் தம் தம் பொறிகளிலே செல்லாமற் காத்து விருப்பு வெறுப்புமற்று அகத்துற வொழுக்கம் வாய்ந்த தகவுடையாரது சிந்தையில் இறைவன் இடை விடாது வீற்றிருப்பதினல், அத்தூயோர், தவ முயலும் வேட்கையுடைய மடவாருடன் அரிய தவம் புரியினும் அவரது உணர்வு அசைவின்றி ஒரு பெற்றித்தே யாகுமாதலான், அன்னரை மன்னுலகம் போற்றுதலில் யாதும் ஐயமிலது,

'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே'

என்ற மெய்ப்பாட்டியலில் 'உணர்வு' என்பது அறிவுடைமை

என்றும் அஃதாவது உலகியலால் செய்யத் தகுவது அறித லென்பதென்றும் பேராசிரியர் உரை வகுத்தார். இத்தகைய உணர்வு, பொறிகட்கிறைமையான மனம், பொறி யொடு தொடர்ந் துணரும் உணர்வு, மனம் பொறியோடு தொடர்பின்றி உணரும் உணர்வு என்றிரு வகைத்து, ஐம் பொறிவழிச் செல்லாது மனதை அடக்குந்திறன் நீத்தார்க்குச் சிறப்பாக உரியது. இது பற்றியே, நீத்தாரை ஆமைபோல் ஐந்தடக்கினரென்றும், பொறிவாயில் ஐந்தவித்தார் என்றும் கூறுப. எனவே நீத்தார் என்பார் பொறியைத் தம் வழியாக வுடைய ஐந்துணர்வுடைய ராதலின், அவ் வுணர்வை, வஞ் சிப்பதொரு அவாவின்கட் செல்லவிடாது அவித்தவர். புலம் வென்ற புன்மையில் காட்சியவர். அறிவின் ஒழுக்கத்தைக் காட்டும் அறவடிவர். அருளொழுக்கம் பூண்ட தெருளு முடையவர். பிறரை யாக்கற்கும் கெடுத்தற்குமுரிய ஆற்ற லமைந்த சிறந்த பெருமையர். பிறவுயிர்க்கு உறுகண் செய்யா மையும் அறநெறிதிறம்பாது வரம்பிலாற்றலும் பேரருளுடை மையுங் கொண்டு தமக்கு உற்ற நோயினைப் பொறுத்தலுமே, மனத்தூய்மை வாய்ந்த இத்தவ மெய்யர் பால் காணப்படும் சிறப்புச் செயல்கள். இவ்வாறு ஆருயிர் மாட்டு அருள்புரிந் தொழுகி நன்மையே யல்லாது பிறிதொன்றையு முணராத நீர்மையர் வருந்துமாறு பெரும்பிழை இழைத்தவர்கள் அன்ன வரால் வசை கூறப்பட்டு நீங்காத் தீவாய் நரகுக்கும் இரை யாவர். சிறந்தமைந்த பெரியாரைப் பிழைத் தொழுகுவார் உய்யாரென்பது பொய்யில் புலவர் பொருளுரை. இவர் தம் உள்ள ஒருமையின் விழுப்பத்தால் தெய்வமே போல் விளங்கி, செயற்கரிய செய்வாராதலின் அன்னாரது பெருமை துணைக் கூறின், அஃது அளவிடலரிது, மற்றும் அதுவே இவ் வையத்தில் உயர்ந்தது. என்னெனின் ஐந்துங் காப்பான் வரன் என்னும் வைப்புக்கோர் வித்தென்க.

இங்ஙனம் திகழும் உள்ள வொருமை வலிவில் மேம்பட்டு நன்னெறியில் நின்றார் அடையும் பெருமையும், மனத்தை அடக்காது தீ நெறியின்கண் நின்றாரடையும் சிறுமையும் விளக்குதற்கு,

> ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்பு ளார் கோமான்
> இந்திரனே சாலுங் கரி.

என்ற வள்ளுவரது வாயுறை வாழ்த்து சிறந்த எடுத்துக்

காட்டாக நிற்கும். புலன்கள் மேற் செல்கின்ற அவா ஐந்தை யும் அடக்கினனது ஆக்கல் அழித்தல் என்ற இரு வகை யாற்றலுக்கும் அகன்ற விசும்பி லுள்ளார்க்கு நாயகனுகிய இந்திரனே அமையுஞ் சான்று என்பது இக் குறட்பாவின் கருத்து. நீத்தார்க்குரிய ஆற்றலின் உண்மையினை யுணர்த்தும்,

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்.

என்ற பொய்யா மொழி ஈண்டு நினைவிலே பதிக்கற் பாற்று. இவ் விரண்டு குறட் பாக்களையும் பிணைத்துக் கருதிய வழி ஐந் தவாவினையும் அவித்தவரே பென்னம் பெரிய தவப் பெற்றி யுடைய நிறை மொழியாள ரென்பது தெளியப்படும். மற்றும் செறுத்தாரை அழிக்கவும் சேர்ந்தாரை ஆக்கவும் வல்ல தவ வலியினை யுடையார் அருளமைந்த உளமுடைய ராதலான், தமக்கு இன்னா செய்யும் பகைவனையும் கெடுக்க எண்ணார் என்பது கருதி 'எண்ணின்' என்றும், ஒன்னார்த் தெறல் உவந்தாரை யாக்கல் என்ற இரண்டும் ஒரு சேரக் கொண்டு ஆற்றலென அஃறிணை யியற் பெயரான் ஆசிரியர் கூறிய அருமை நன்கு நுனித் தறியற் பாலது. மற்றும் 'ஐந்தவித்தான்' என்ற தொடக்கத்துக் குறளினுல், ஐந் தவித்த ஆற்றலுடைய நிறை தவ முனிவர் முன் ஆனினத் துள் உயர் தேனும், மரத்து ளுயர் வேய் தாரும், மணியு ளுயர் சிந்தாமணியும் பணி யாற்றும் சிறப்பும், ஆக்கப் பெருக்கமுமைந்த வானோர் தலைவனது பெருமை எனைத்தும் பயனில தாயிற்று என்ற இக் குறிப்பினையும் அறிதற் கிட னுயிற்று. என்னெனில் குறையாச் செல்வப் பெருக்கினைக் கொண்ட இந்திரன் செய்வன அறிந்து செய்யாது பிறனில் விழைந்ததினுல், பிறனில்லின் கண் புகுவான் மாட்டுள தாகும் பகை பாவ மச்சம் பழி என நான்கிற்குத் துலக்கமான இலக்கணமாகி ஒளி யிழந்து சிறுமை யுற்றனன்.

எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

என்ற குற ளமுது சிந்தைக்கு இனியதாய் நின்று உயிர்க் குறுதி பயக்கும் பான்மையினை இவண் தெளிதற் பாலது 'எனைத் துணையர்' என முதற்கண் பெருமை பற்றிப் பன்மைப் பாலாற் புகன்ற வள்ளுவப் பெரியார், பின்னர் பிறன் இல்லின் கட் புகும் இழிவும் பழியும் சிறுமையும் கருதித் 'தேரான்'

என ஒருமைப் பாலாற் புலமைக்கலை தோன்றச் சுட்டிக் கூறியதை, பகுத்தறியுந் தோறும் மெய்ம்மையாய அறத் தெளிவு தேறற் பாலது.

வானோர் கோமான் சாபமும் பெற்று அது நீங்க அருளும் பெற்றமையான், அவ்விந்திரனை சாப மொன்றே பெற்றா ரினின்றும் அருளொன்றே பெற்றாரினின்றும் நன்கு பிரித்துக் காட்டும் பொருட்டு இந்திரனே கரி யென வள்ளுவர் ஏகார மிட்டுக்கூறியது அறியத் தக்கது. ஏகாரத்துடன் 'சாலும்' என்பதைச் சேர்த்துக் கூறியதினான் 'சாலும்' என்பது பயனில் சொல்லாகக் கருத இடனின்று. இந்திரனே போன்று சாபமும் அருளும் பெற்றாரும் வேறு சிலருளதாக யிருக்கலா மென்பது பற்றி அவர்களினும் இந்திரன் சான்றென உணர்த்த இந்திரனே சாலு மென்றா ரென்க. மற்றும் நீத்தாரது தன்மையினையும் அளவில் ஆற்றலையும் உலகுக்கு எடுத்துக் காட்டியது இந்திரனே யாதல் பற்றி அவனையே 'சாலுங் கரி' என்றது உளங் கொளற் பாலது. இஃதுண்மையாயின், இந்திரற் குற்ற சிறப்பென்னை யெனின் இந்திரனொ டொழிந்த மற்றையோர்க்கு அருளுற்ற வழிச் சாபமும், சாபமுற்ற வழி அருளும் காண்ப தரிது. இந்திரனோ சாப முற்ற வழி, அருளும் பின் பெற்று, சாபமும் நீங்கிலனாகி, சிறுமையும் பழியும் சேரப் பெற்று, இரண்டு முடையதாகின்றதினான், இவ் விரண்டு முடைமை ஏனையோர்க் கின்மையால், இந்திரனே சாலுங் கரி என ஏகார மிட்டு அமைவுங் கூறினது ஈண்டு நன்கு சிந்தித்து உணரத் தக்கது. சற்று உணரின், ஏகாரம் சான்றின் மாட்சி நிலை தோன்ற நிற்பது அறியற் பாற்று. அவனி தலத்து ஐம் புலனாய சேற்றில் செல்கின்ற அவா ஐந்தையும் அடக்கினாது சிந்தையின் பெருமையும், அவற்றை யடக்க இயலாதவனது சிறுமையும் இழி பழியினையும் உணர்த்தும் பொருட்டு, வள்ளுவனார் ஐந்தவித்தான் ஆற்றற்கு இந்திரனே கரி என்று கூறி, பிறப்பால் மக்களாயினாரும் தம துளங் காத்து, சுவை முதலாய ஐந்தின் கூறுபாடுகளை ஐய மறத் தெளிந்து ஐந்தவிக்கும் வகையான், அமரர் கோமானுக்கும் சிறந்தவ ராவரென்றும், அரியது ஐவகை அவாவி னடக்கம் என்றும் குறிப்புப் பட உணர வைத்தது நோக்கற் பாலது.

ஒருவர் எப் பிழை பொறுப்பினும் தம்முடன் வாழ்ப வளுக் கிழைத்த பிழையினைத் தமக் குற்றனவாகக் கருதிப் பொறா ரென்பது புதுவதன்று. இஃது இவ் வுலகத் தியற்கை,

பதிற்றுப்பத்தும் பதிப்பாசிரியரும்.

திரு. வே. கோபாலன், செந்தமிழ்க் கல்லூரி, பனசை.

மேற்கண்ட தலைப்பின்கீழ் வித்துவான் அரங்கசாமி அவர்களால் எழுதப்பட்ட ஒரு கட்டுரை தமிழ்ப்பொழிலில் தரப்பெற்றுள்ளது. அதைப் படித்த மாணவர்கள் பதிற்றுப் பத்துப் பதிப்பாசிரியர் அவர்கள், இரண்டாம் பத்தில் பொருந்தா உரைகள் பல எழுதியுள்ளார்கள் என்று கருதுதற்கு இக் கட்டுரை இடன் தருகின்றது. பதிப்பாசிரியர் அவர்கள்மேல் சுமத்தப்பட்ட பொருந்தாப் பழிகளைக் களைந்து, அவர்தம் புலமையின் அகலத்தை அறிவுறுத்துவதே இக் கட்டுரையின் நோக்கம்.

கட்டுரையாளர், 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்' என்புழி, ஆரியர் என்ற சொல்லுக்கு முனிவர் என்று பதிப்பாசிரியர் கூறும் பொருள் பொருந்தாது என்பதைப் பதிகத்து 'ஆரியர் அலறத் தாக்கி' என்ற சொற்றொடரைக் கொண்டு நிறுவினார். பதிற்றுப்பத்தி லுள்ள தற்போழ்தைய எட்டு பதிகங்களையும் பாடியவர், எட்டு பத்துக்களையும் பாடிய எட்டுப் புலவர்களினும் வேறாயவர் என்பது ஆராய்ச்சியால் அறுதியிடப்பட்ட செய்தி ஆதலின், அஃது ஒரு சிறந்த சான்றாகாது. பதிப்

காம முனிந்து கடுஞ் சினம் கடிந்த முனிவரோ ஐந்தவித்தாராதலின், பிழைத்தது பொறுத்த லென்ற அறக் கடம் பூண்ட பெருமையான், தவ வாழ்வில் ஏதம் இழைத் தவனைப் பொறுத்தது மல்லாமல் அருளும் செய்து இவ் வுலக முள்ளளவும் அழியாப் புகழினையும் ஏற்றுக் கொண்டது தெளிய அறியப்பட்ட மெய்ம்மையாம். இஃது தோன்றற் பொருட்டே அவித்தா னின்னாரெனப் பெயர் சுட்டிக் கூறாது, காரணப் பெயராம் ஐந்தவித்தா ரெனக் கூறப்பட்டது நெறியாமென்க. இருமை வகை தெரிந்து விருப்பு வெறுப்பு மற்று ஐம் புலன் களை வென்று உள்ள வொருமை வலிவில் மேம்பட் டுயர்ந்த தூயோர், அற முது தவ முயலும் மடவாரோடு பிரிவின்றி ஒருங் கிருந்தும், தமதுள்ளத் துணர்வை எஞ் ஞான்றும் உணர்வுக்கு உணர்வாய் விளங்கும் மெய்ப் பொருளாகிய இறைவனது திருவருளாகிய உள் ளொளியிற் பதித்து அதை நாடியிருப்பரேல், அன்னவர் முக் குற்றமற்ற துறவோ ராவர். துறவு, பிறன் பழிப்பதற் கிடனின்றி நெறி திறம்பாது, ஐம் புலன்களையும் வென்றடக்கிய ஆற்றல் வாய்ந்த வாகை நிலை யென்பது இவண் கருதற் பாற்று. (தொடரும்)

பாசிரியர் அவர்கள், ஆரியர் என்றசொல் ஒரு இனத்தாரைக் குறிக்க வழங்குவ தாயிற்றே; இவ் வடியில் இனத்தைக் குறிக்கின்றதா அல்லது அவ் வினத்துள் ஒரு உட்பிரிவைக் குறிக்கின்றதா என்று ஐயுறற் பால ஞகிய ஒரு நுண்மாண் நுழைபுலமுடைய மாணுக்கனுக்கு அறிவுறுத்துவதற்காக, 'ஆரியர் என்பது இங்கே முனிவர்களை' என்று குறித்தார். எனவே, ஆரியர் என்ற சொல்லுக்கு நேர் பொருள் முனிவர் என்பது இல்லை என்பதைத் தாமும் அறிவுறுத்தினு ராயிற்று. அச்சொல் முனிவர் என்ற பொருளைத் தந்தமை சார்பினு லாகும் என்பதைக் குறிப்பதற்கு 'இங்கே' என்ற சொல்லைப் பயன்படுத்தினர். ஈண்டுச் சார்பு இமயமலை. இமய மலையின் சிறப்பு புறப்பாட்டொன்றில், 'சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை அந்தி அந்தணர் அருங்கட னிறுக்கும், முத்தீ விளக்கிற் றுஞ்சும் பொற்கோட் டிமயம்' என்று சுட்டப் பெற்றிருக்கிறது. இனிச், சிலப்பதிகாரம், கால்கோட் காதையில், செங்குட்டுவன் உரையாக, இமய மலையில் உள்ளார் 'வடதிசை மருங்கின், தடவுத்தீ அவியாத் தண்பெரு வாழ்க்கை மறைநாத் தோம்புநர்' என்று குறிப்பிடப்பெற்றுள்ளனர். இங்ஙனம் நல்லிசைப் புலவர்களது செய்யுட்களைப் பன்மாணும் பயின்று, பன்னூ லுணர்ந்த செந்நெறிச் செல்வ ராகிய ஐயர் அவர்கள், சார்பு நோக்கி ஆரியர் என்ற சொற்கு முனிவர் என்று பொருள் எழுதியதன் சிறப்பை நன்கு ஆராயாது, கட்டுரையாசிரியர், 'ஆரியர் என்றது முனிவரை எனக் குறித்த கூற்று கூற்றே யாகும்' என்று குறித்தார். பதிப்பாசிரியர் ஆரியர் என்றது இங்கே முனிவர்களை என்று குறித்த சொற்ருெடரில் கட்டுரை யாசிரியர் 'இங்கே' என்ற சொல்லை நீக்கி எழுதிய கூற்றே கூற் ருகும்.

இனி, 'நீ சிவந் திறுத்த நீரழி பாக்கம்' என்ற தொடருக்கு மேற்கோள் கொள்ளும் பதிப்பாசிரியர், 'கட்கொண்டிக் குடிப்பாக்கத்து' என்ற மதுரைக்காஞ்சி யடியைக் காட்டி, அதற்கு இழிந்த குடி என உரை வகுத்திருப்பதும் தவறு என்று கட்டுரையாசிரியர் குறிப்பிட்டார். கட்டுரை யாசிரியர் குறித்துள்ள 'அதற்கு' என்பதன்கண் சுட்டு எதனைக் குறிக்கிறது? இழிந்த குடி என்ற வுரை 'கட்கொண்டிக் குடிப்பாக்கம்' என்ற முழுத்தொடருக்குமா என்று அவரையே உசாவி யறியும் படியாக அவர் வாக்கியம் அமைந்துள்ளது. இன்னும், இது போல இக் கட்டுரையில் அமைந்துள்ள வாக்கியங்கள் பலப்பல. அவற்றை எல்லாம் எடுத்து விதந்து, காலத்தை விணுக்குவது எம்நோக்கம் அல்ல. இனி, நீரழி பாக்கம் என்பதற்குப் பதிப்பாசிரியர் எழுதிய குறிப்பு 'தமது இயல்பான நீர்மை யழிந்த ஊர்கள்' எனவும், 'நீர் நிலை யழிந்த ஊர்கள் எனவு மாகும்.' என்பதே. பழைய உரை யாசிரியர், 'நீரழி பாக்கம் என்புழிப் பாக்கம் என்றது நெய்தல் நிலத்தூர்க்கே யன்றிக்' 'கட்கொண்டிக் குடிப்

பாக்கத்து நற் கொற்கை' என்று வந்தமையான் ஓரோ வழி அரசன் இருப்புக்கும் பெயராமாதலின் ஈண்டுப் பாக்கமுடைய பேரூர்கள் எனப்பட்டது' என்று குறித்துள்ளார். பதிப்பாசிரியர் அவர்கள் 'கட்கொண்டி......கொற்கை' என்ற மதுரைக் காஞ்சியடிக்கு நச்சினார்க்கினியர் கள்ளாகிய உணவினை யுடைய இழிந்த குடிகளை யுடைய சீறூர்களையு முடைய நன்றாகிய கொற்கை என உரை வகுத்தார்' என்பதை இடன் நோக்கிச் சுட்டினார். பதிற்றுப்பத்துப் பழைய உரையாசிரியர், பாக்கம் என்பதைப் பாக்க முடைய பேரூர்கள் என்று சுட்டவும் நச்சினார்க்கினியர் பாக்கம் என்பதைச் சிற்றூர் என்று பொருள் கொண்டார் என்பதைத் தெரிவிக்கவே, பதிப்பாசிரியர் அக் குறிப்புரை எழுதினார். எனவே, கட்டுரையாளரின் கூற்று, பதிப்பாசிரியர், பழைய உரையாசிரியர் என்ற இவர்களது குறிப்புக்களைப் பிரித்து அறிய வியலாத அவர்தம் இடர்ப்பாட்டையும், மேற்கோளுக்குப் பதிப்பாசிரியர் உரை குறிப்பிட்டதன் இயைபை நன்கு நோக்காமையையும் புலப்படுத்துகிறது.

இன்னு மவர் 'அழியச் செய்தே' என்ற குறிப்பிற்குப் பதிப்பாசிரியர் 'அழியச் செய்தே என்பது அழியச்சே என்று வழங்கும்' என்ற குறிப்புரை எழுதியதை எதுகை மோனை நயம்படக் கண்டித்தார். பதிப்பாசிரியர், 'அழியச்சே' என்பது பழந் தமிழ் எனவும், தமிழ் மரபு எனவும் குறிப்பிட்டனரா? அழியச் செய்தே என்பது தற்போது உலக வழக்கில் 'அழியச்சே' என்று வழங்கும் என உலகியல் மரூஉ முடிபை உணர்த்தினார்.

வழங்கியல் மருங்கின் மருவொடு திரிவன வற்றையும் உணர்க என்று சொல்லிய தொல்காப்பியனாருக்கே கட்டுரையாளர் மறுப்பு எழுதலாம். பதிப்பாசிரியர் தற்போது உலகில் வழங்கும் 'அழியச்சே' என்ற சொல் பண்டைய 'அழியச் செய்தே' என்ற சொல்லின் மரூஉ என்பதை அறிவுறுத்தவே அக் குறிப்பு எழுதினார் என்பதை அறியலாம்.

இனிப், 'புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை அரம்பின்' என்புழி அரம்பு என்பதற்குப் பழைய உரையாசிரியரின் உரை குறும்பு எனப் பண்புற வமைந்தது எனவும், பதிப்பாசிரியர் குறும்பு என்பதற்குச் சேஷ்டை என்று பொருள் கூறிய சேஷ்டைதான் என்னே எனக் கட்டுரையாளர் நயம்பட உரைத்துக் குறும்பு என்ற சொற்குப் பாலை நிலத்து ஊர் எனப் பொருளுங் கூறினார்.

யாம் முன்பு கூறியபடிப் பன்னூல் பயின்ற சென்னெறிச் செல்வ ராகிய பதிப்பாசிரியர் ஏன் குறும்பு என்பதற்குச் சேஷ்டை என்று பொருள் எழுதவேண்டும் என்பதை யாராய்வாம். அரம்பு என்ற சொற்குப் பொருளாகப் பழைய உரையாசிரியரால் எழுதப்பட்ட சொல், பல பொருளொரு சொல்லாகிய

குறும்பு, என்பது. அக் குறும்பு என்பதற்குப் பாலை நிலத்து ஊர் எனவும் சேஷ்டை, குறும்பர், அரண், சிறுமை, போர் எனவும் பொருள்கள் உள. இவற்றுள் பாலை நிலத்து ஊர் என்று மாணுக்கன் குறும்பு என்ற சொற்குப் பொருள் கொண்டால், அப் பொருள் அரம்பு என்ற சொற்குப் பொருளாக அமையாது என்று கொண்ட குறிப்பாசிரியர் மாணுக்கனுக்கு உய்த் துணர்வு இன்று என்பது பற்றிச், சேஷ்டை எனக் குறிப்பு எழுதினுர். இனி, அரம்பு என்ற சொற்குப் பாலை நிலத்து ஊர் என்று பொருள் கொள்ளுவதற்குப் பண்டைப் புலவர் சொற்களாகச் சான்று இருப்பதாகத் தோன்றவில்லை. இனி அரம்பு என்ற சொல் பயின்ற இடங்கள் சில நோக்கிக் கட்டுரையாளரின் கருத்தாழத்தைக் காண்பாம்.

'மெலியவர் பெற்றசெல்வம் வேரொடும் கீழ்ந்து வௌவி
வலியவர் கொண்டுமேலை வரம்பிகந் தரம்பு செய்யும்
கலியது பிறவி கண்டாம்' சிந்தாமணி —2727.

அரம்பு குறும்பு:—

'குறும்பு செய்யும் பிறவியது கலியைக் கண்ணுற்கண்டாம்' நச்சர் உரை.'

இனிப் பெருங்கதை யுள்ளும் அரம்பு என்ற சொல் மூன்று இடங்களில் வந்துள்ளது. மூன் றிடங்களிலும் அரம்பு என்ற சொல் சேஷ்டை என்று பொருள் படற்பாலதே யொழிய பாலை நிலத்து ஊர் என்று பொருள் பெறுதற் பால தின்று.

'அலகை வேந்தன் ஆணை கேட்பது
அரம்பு மல்லலுங் கரம்பு மில்லது
செல்வப் பெருங்குடி சிறந்தணி பெற்றது'
[மகதகாண்டம், 2-47 : 49

'திணைவிராய் மணந்து திருவிழை தகைத்தாக்
களவும் அரம்பும் கனவினு மின்றி
விளைத லோவா வியன்பெரு நாடு'
[வத்தவ காண்டம், 2-70 : 72]

'இரவி தத்தன் என்னும் உரவோன்
பெரும்படை தொகுத்துவந்து அரம்புசெய் தலைத்தவின்
இருந்த நகரமும் கலங்க' வத்தவ காண்டம், 4-74 : 76

மேற் காட்டிய மேற்கோள்களால் அரம்பு என்ற சொற்குச் சேஷ்டை என்று பொரு ளெழுத வேண்டிய இன்றியமையாமை விளக்கப்பெற்றது.

இதுகாறுங் கூறிய வற்றைக் கொண்டு நன் மாணுக்கர், பதிற்றுப்பத்துப் பதிப்பாசிரியர் மேற் சுமத்தப்பெற்ற பொருந் தாப் பழிகளைக் களைந்து உண்மைப் புலமையை உய்த்துணர்ந்து அறிய முயல்வாராக.